


06.05.2025

தலைப்பு செய்திகள்

- பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகள் தொடர்பாக மத்திய உள்துறை செயலர் அனைத்து மாநில தலைமை செயலர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.
- புதுதில்லி பாரத் மண்டபத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி ஊடக இணையதள கருத்தரங்கில் இன்று பங்கேற்கிறார்.
- தமிழகம் வளர்ச்சி திட்ட செயல்பாட்டில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.
- தென்மேற்கு பருவமழை இந்தாண்டு முன்கூட்டியே வரும் 13ம் தேதி தொடங்குவதற்கான சாத்தியகூறுகள் தென்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

***********

போர்கால ஒத்திகை

நாடுமுழுவதும் நாளை பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகளை நடத்துவது தொடர்பான தயாரிப்பு நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக மத்திய

உள்துறை செயலர் திரு.கோவிந்த் மோகன் அனைத்து மாநில தலைமை செயலர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

புதுதில்லியிலிருந்து காணொலி வாயிலாக அவர் பங்கேற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் நாட்டின் சிவில் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, அதிரடி படை மற்றும் உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பாதுகாப்பு பிரிவுகளின் உயர் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக நேற்று சிவில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகளை நாடுமுழுவதும் நடத்த மத்திய உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ள நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 244 மாவட்டங்களில் இந்த ஒத்திகை பயிற்சிகள் இடம்பெற உள்ளன.

கிராமங்கள் நிலையில் இந்த ஒத்திகை பயிற்சிகள் நடத்த உள்துறை அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

வான்வழி பாதுகாப்பு திறன், ஹாட்லைன் செயலாக்கம், இந்திய விமானபடையுடனான வானொலி இணைப்புகள், கட்டுப்பாட்டு அறைகளின் திறன் ஆகியவற்றின் செயல்பாட்டை ஆராய்வதே இந்த பயிற்சியின் நோக்கமாகும்.

தாக்குதல் நடைபெற்றால் எவ்வித சவாலையும் சமாளிக்கும் வகையில் பொதுமக்களையும், மாணாக்கரையும் தயார்படுத்துவதற்காக இந்த ஒத்திகை பயிற்சிகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

நாட்டின் முக்கிய இடங்களை எதிரிகளிடமிருந்து மறைப்பது,

மின் இணைப்பை நிறுத்தி குறிப்பிட்ட இடங்களை இருளாக்குவது,

வெளியேறி செல்வதற்கான நிலைப்பாடுகள் உள்ளிட்டவை இந்த ஒத்திகை பயிற்சியில் இடம்பெறும்.

***********

அஜித்தோவல்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை அடுத்து தொடர்ச்சியான உயர்நிலை கூட்டங்களின் ஒருபகுதியாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவல் பிரதமர் திரு.நரேந்திரமோடியை இன்று அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார்.

பாதுகாப்புத்துறை செயலர் திரு. ராஜேஷ் குமார் சிங் நேற்று பிரதமருடன் ஆலோசனை கலந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக முப்படை தலைவர்கள் தனித்தனியே பிரதமரிடம் நாட்டின் பாதுகாப்பு குறித்து எடுத்துரைத்த நிலையில் இந்த உயர்நிலை கூட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

***********

António Guterres

இதனிடையே பஹல்காம் தீவிரவாத குற்றவாளிகள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.பொதுச்செயலர் திரு. Antonio Guterres தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர் இந்தியா பாகிஸ்தான் இடையே ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகள் அமைதிக்கான புதிய முயற்சிகள், சமாதான நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு ஐ.நா. தயாராக உள்ளது என்று குறிப்பிட்டார்.

***********

மைக் ஜான்சன்

தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்திற்கான அனைத்து முயற்சிகளிலும் அமெரிக்கா இந்தியாவிற்கு முழுமையான ஆதரவு அளிக்கும் என்று அமெரிக்க பிரதிநிதி சபை தலைவர் திரு.மைக் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முக்கியமான நட்புறவு நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறிய அவர், இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகள் முன்னேற்ற பாதையில் செல்வதாக குறிப்பிட்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து ட்ரம்ப் நிர்வாகம் இந்தியாவிற்கு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவை அவர் எடுத்துரைத்தார்.

***********

பிரதமர்

புதுதில்லி பாரத் மண்டபத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமைத்துவம், படைப்பாற்றல் திறன் தொடர்பான ABP ஊடக இணையதள கருத்தரங்கில் இன்று பங்கேற்கிறார்.

2047ஆம் ஆண்டு வளர்ச்சி அடைந்த இந்தியா பாதையில் நம் தேசத்தை கொண்டு செல்லும் வகையிலான புதுமையான நிலைப்பாடுகள் குறித்து பிரதமர் இதில் எடுத்துரைப்பார் என தெரிகிறது.

பல்வேறு துறைகளில் தொலைநோக்கு திட்டங்களை கண்டறிந்து, படைப்பாற்றல் திறனுடன் கூடிய புதுமையான நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்கான கருத்துக்கள் இதில் விவாதிக்கப்படுகின்றன.

தொழில்முனைவோர் தொடங்கி பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறும் இந்த ஆலோசனையின் மூலம் சவாலான பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வுகள் கண்டறிந்து வளமான எதிர்காலத்திற்கு நாட்டை கொண்டுசெல்வதற்கான நடவடிக்கைகள் இதில் ஆராயப்படுகின்றன.

***********

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

தகவல் தொடர்புக்கான நுழைவாயிலாகவும், ஆளுமைக்கான கருவியாகவும் கைபேசிகள் உருவெடுத்திருப்பதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 22ஆவது பாரத தொலை தொடர்பு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் உலக அளவில் 2ஆவது பெரிய கைபேசி சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார்.

நாடுமுழுவதும் 120 கோடி மக்கள் கைபேசிகளை பயன்படுத்துவதாக கூறிய அவர் அகண்ட அலைவரிசை சேவையை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 95 கோடியாக அதிகரித்துள்ளது என்றார்.

இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் 97 கோடியாக உயர்ந்துள்ளதாக கூறினார்.

தொலைதொடர்பு மேம்பாட்டு குழு ஏற்பாடு செய்துள்ள இந்த இரண்டு நாள் நிகழ்ச்சி உலகம் முழுவதிலும் உள்ள தொழில்முனைவோரை இந்திய வர்த்தக சந்தைகளுடன் இணைத்துள்ளதோடு, நம் நாட்டின் தொலைதொடர்பு உற்பத்தி திறனையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது.

***********

ஜெய்சங்கர்

உலக அளவில் தேவைப்படும் படைப்பாற்றல் திறன்களை வழங்கும் நிலையில் இந்தியா முன்னோடி நாடாக திகழ்கிறது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் திறன்களுக்கான உலக அங்கீகாரம் “Gati” நிகழ்ச்சியை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் வாய்ப்புகளை கண்டறிய உயர் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றார்.

புதிய தொழில் நுட்ப தேவைகள் அதிகரித்து வரும் நிலையில் மாற்றங்களும் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், தொழிற்கல்வி பயிற்சிகளை அரசு வழங்கி வருவதாக எடுத்துரைத்த அவர், இந்தியாவின் பணி திறன் ஆக்கப்பூர்வமாக அமையும் வகையிலான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

***********

மல்லிகார்ஜுன கார்கே

சாதிவாரி கணக்கெடுப்பு குறித்த சில ஆலோசனைகளை காங்கிரஸ் தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு அவர் எழுதிய கடிதத்தில் இக்கணக்கெடுப்பு தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இடஒதுக்கீட்டிற்கான 50 சதவிகித உச்சவரம்பை நீக்க வேண்டும் என்று கோரியுள்ள அவர், தனியார் கல்வி நிறுவனங்களின் SC ST OBC பிரிவினருக்கு இடஒதுக்கீடு நடைமுறைபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதில் அளித்துள்ள பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு.குருபிரகாஷ் இந்த முடிவிற்கான பலனை பெறுவதற்காகவே காங்கிரஸ் இந்த கடிதத்தை எழுதியுள்ளதாக குறை கூறியுள்ளார்.

இத்தகைய முடிவை எடுக்க கூடிய துணிச்சல் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு மட்டுமே இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

***********

பபித்ரா மார்ஹெரிட்டா

மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு. பபித்ரா மார்ஹெரிட்டா 5 நாள் பயணமாக நாளைமறுநாள் நியூசிலாந்து மற்றும் ஃபிஜி நாடுகளுக்கு செல்கிறார்.

நியூசிலாந்தில் அரசியல் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் அவர் தொழிற்கூட்டமைப்பு தலைவர்களுடனும், இந்திய வம்சாவளியினருடனும் கலந்துரையாடுகிறார்.

இதனை தொடர்ந்து ஃபிஜி நாட்டிற்கு செல்லும் அவர் அரசியல் தலைவர்களுடன் பல்வேறு முக்கிய கூட்டங்களில் பங்கேற்கிறார்.

அமைச்சரின் இப்பயணம் இரு நாடுகளுடனான இந்தியாவின் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***********

முதலமைச்சர்

தமிழகம் வளர்ச்சி திட்ட செயல்பாட்டில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் திமுக தலைமையிலான மாநில அரசு அனைவருக்குமான நல திட்டங்களை தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

தேர்தல் அறிக்கையில் தெரிவித்த பெரும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

***********

பிளஸ் டூ ரிசல்ட்

தமிழகத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் நாளை மறுநாள் வெளியிடப்படுகின்றன.

மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இதனை வெளியிடுகிறார்.

கடந்த மார்ச் 3ஆம் தேதி தொடங்கி 25ஆம் தேதிவரை பிளஸ் டூ தேர்வுகள் நடைபெற்றன.

***********

பொறியியல் விண்ணப்ப பதிவு

இதனிடையே B.E., B.Tech உள்ளிட்ட பொறியியல் படிப்புகளில் நடப்பாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்ப பதிவு சென்னை கிண்டியில் உள்ள தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் நாளை காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

அண்ணா பல்கலைகழக துறை கல்லூரிகள், அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் சுய நிதி பொறியியல் கல்லூரிகளில் உள்ள 2 லட்சம் இடங்கள் பொது கலந்தாய்வு முறையில் நிரப்பபட உள்ளன.

***********

தர்மபுரி

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு சின்னாற்றின் குறுக்கே அமைந்துள்ள பஞ்சப்பள்ளி மற்றும் ராஜபாளையம் அணைக்கட்டுகள் புனரமைக்கும் பணிகளை, மாநில வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் இன்று தொடங்கிவைத்தார்.

இதன் மூலம் பாலக்கோடு வட்டத்தில் உள்ள 856 நிலங்களின் நேரடி பாசன வசதி உறுதி செய்யப்படுவதோடு, 7 கிராம பகுதிகளை சேர்ந்த விவசாயம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தியாகும்.

***********

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாநிலத்தில் கொலை சம்பவங்களில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரினார்.

பீளமேடு பகுதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் புதிய நிர்வாகிகள் நியமனம் குறித்த ஆலோசனை கூட்டத்தில் திரு.நயினார் நாகேந்திரன் இன்று பங்கேற்றார்.

வாய்ஸ்

***********

ஆஸ்துமா தினம்

உலக ஆஸ்துமா தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

“அனைவருக்கும் உள்இழுப்பான் சிகிச்சைகள் கிடைக்கச்செய்ய வேண்டும்” என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தாண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

நுரையீரல் செயல்திறன் ஆய்வு, அலர்ஜி சோதனைகள் ஆஸ்துமா தாக்கத்தை கண்டறிய உதவும் என்று திருச்சியை சேர்ந்த ஆஸ்துமா மற்றும் நுரையீரல் சிகிச்சை நிபுணர் டாக்டர் கமல் கூறுகிறார்.

வாய்ஸ்

***********

தென்மேற்கு பருவமழை

தென்மேற்கு பருவமழை இந்தாண்டு முன்கூட்டியே வரும் 13ம் தேதி தொடங்குவதற்கான சாதகமான சூழல் நிலவுவதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக மே மாத இறுதியில் தொடங்கும் தென்மேற்கு பருவமழை, இந்தாண்டு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக தென்கிழக்கு வங்க கடலின் சில பகுதிகள், அந்தமான் நிக்கோபார் தீவுகளில், தொடங்கும் என்று, இம்மையம் கூறியுள்ளது.

தமிழ்நாட்டில் வழக்கம்போல் ஜீன்மாத தொடக்கத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

***********

இருவரி

திருச்சி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வருகை தருவதை ஒட்டி நாளைமறுநாள் முதல் இரண்டு நாட்களுக்கு மாவட்டத்தில் ட்ரோன் பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தடையை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி வரும் 12ஆம் தேதி தொடங்க உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு கோடை பருவத்திற்கான மின்னணு பயிர் சாகுபடி பரப்பு கணக்கெடுப்பு பணி நடைபெறுவதால் விவசாயிகள் இதற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டத்தில் நடப்பாண்டிற்கான வருவாய் தீர்வாய கணக்குகள் முடிவு செய்யும் பணி ஆட்சித்தலைவர் திரு.மோகன சந்திரன் தலைமையில் இன்று தொடங்கியது.

தூத்துகுடி:

தூத்துகுடி மாவட்டத்தில் உள்ள பள்ளி வாகனங்கள் அரசு விதிமுறைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் 67 பள்ளிகளில் இயக்கப்படும் 213 வாகனங்களை தணிக்கை செய்யும் பணிகளை இன்று ஆய்வு செய்த அவர், குறைபாடுடைய வாகனங்களை சரி செய்து மீண்டும் ஆய்வுக்கு கொண்டு வர அறிவுறுத்தினார்.

நாமக்கல் மாவட்டம் பவித்ரம் பகுதியில் இன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 700 காளைகளை அடக்க 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் களமிறங்கினர்.

வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

நீலகிரி குன்னூர் தொட்டபெட்டா வனப்பகுதியில் ஒற்றை காட்டு யானை நுழைந்துள்ளதால் சுற்றுலா பயணிகள் இன்று அப்பகுதிக்கு செல்ல வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

***********

கோவில்

கன்னியாகுரி மாவட்டம் சுசீந்திரம் அருள்மிகு தானுமாலயசுவாமி சித்திரை பெருந்திருவிழாவில் இன்று திருத்தேரோட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று இரவு ஏழரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

***********

வில்வித்தை

உலக கோப்பை வில்வித்தை போட்டிகளின் 2ஆம் கட்டம் சீன ஷாங்காயில் இன்று தொடங்குகின்றன.

வரும் 11ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியா சார்பில் ஜோதி சுரேகா, தீபிகா குமாரி, ஓஜஸ் டியோடேல், அதிதி சுவாமி, தருண்தீப் ராய், உள்ளிட்ட 16 வீர வீராங்கனைகள் பல்வேறு பிரிவுகளில் களமிறங்குகின்றனர்.

***********

பேட்மிண்டன்

தாய்பே ஓப்பன் பேட்மிண்டன் போட்டிகள் சீன தாய்பேயில் இன்று தொடங்குகின்றன.

இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், அன்மோல் கர்ப், உன்னாட்டி ஹூடா உள்ளிட்டோர் இதில் களமிறங்குகின்றனர்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********